மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு நவம்பர் திங்கள் 29ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.ம.எண்.01/2022
உள்
அசல் வழக்கு எண்.69/2020
-------------

1. சரவணன்
2. சுப்புலட்சுமி ... மனுதார்கள்/வாதிகள்

/எதிர்/

1. சரஸ்வதி
2. அறம்
3. கணபதி
4. தனலட்சுமி
5. மரகதம்
6. லோகமுத்து கிருஷ்ணன்
7. அருள்ஜோதி
8. அருள்சக்தி
9. அருள்பிரகாஷ்
10. அருள்நிறைமதி
11. அய்யாத்துரை
12. பழனிக்குமார்
13. மாடத்தி
14. கணேசன்
15. மகாலட்சுமி
16. சக்கணன்
17. தங்கமாரி ... 1 முதல் 17 எதிர்மனுதாரர்கள்/
1 முதல் 17 பிரதிவாதிகள்

18. நென்மேனி கூட்டுறவு
விவசாய வங்கி அதன்
தலைவர் மூலம் ... 18 எதிர்மனுதாரர்/
உத்தேச 18ம் பிரதிவாதி

இந்த மனு 05.09.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 14.11.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.கணபதிராமன் அவர்கள் ஆஜராகியும், 6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.முனீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 18ம் எதிர்மனுதாரர்/18ம் உத்தேச பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.முரளி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5, 7 முதல் 17 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2)-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மனுவில் கண்ட 18ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 18ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடவேண்டி மனு 05.09.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2). மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-</u>**

எதிர்வழக்குரையில் வழக்குரை தபசில் 4ம் இலக்கச் சொத்தைப் பொறுத்து மீணம்மாள் உயில் எழுதி வைத்துள்ளதாகவும், 6ம் இலக்கச் சொத்தை நவநீதகிருஷ்ணம் மனுவில் கண்ட 18ம் எதிர்மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார. மேலும், மேற்படி 18ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கிற்கு மிகவும் தேவையான கட்சிக்காரர் என்றும், அவரை அசல் வழக்கில் சேர்க்காமல் இருப்பதால் அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையில், மேற்படி நவநீதகிருஷ்ணனுக்கு அவ்வாறு கிரையம் கொடுக்க எவ்வித உரிமையுமில்லை. மேற்படி கிரையம் மனுதாரர்களை கட்டுப்படுத்தக்கூடியதில்லை. மேலும், அக்கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எனவே, அசல் வழக்கில் 18ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்த்து வழக்கை மேல்நடத்த வேண்டியது

அவசியமாக உள்ளது. இல்லாதுபோனால் வழக்கில் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்டம், நஷ்டம் ஏற்பட்டுவிடும். மேலும், மேற்படி கிரையம் மற்றும் உயில் சம்மந்தப்பட்ட சங்கதிகள் 7ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை மனுதாரர்களுக்கு கடந்த 05.08.2022ம் தேதி சார்பு செய்த பின்பு தான் தெரிய வந்துள்ளது. மேற்படி 18ம் பிரதிவாதி தபசில் 6ம் இலக்கச் சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்று 7ம் பிரதிவாதி தெரிவிப்பதால் 18ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கிற்கு அவசிய தரப்பினராக உள்ளார். அவரை அசல் வழக்கில் சேர்த்தால் மட்டுமே வழக்கில் சிறந்த முடிவை எடுக்க இயலும். எனவே, 18ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3). 6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவானது 6ம் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். தாவா மனுவில் 4ம் இலக்கச் சொத்தை பொறுத்து மீனம்மாள் உயில் எழுதிதி வைத்ததாகவும், 6ம் இலக்கச் சொத்தை நவநீதகிருஷ்ணன் 18ம் எதிர்மனுதாருக்கு கிரையம் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். அதுகுறித்து அசல் வழக்கில் எதுவும் தெரிவிக்க கிடையாது. மேலும் உயில் எழுதி வைத்ததாக கூறப்படும் மீனம்மாள் உயிருடன் உள்ளாரா, இல்லை என்பறும் தெரிவிக்க கிடையாது. மேலும், மேற்படி உயிலானது எந்த தேதியில் எழுதப்பட்டது என்று எந்த விபரமும் தெரிவிக்க கிடையாது. மனுதாரர் தாவா மனுவில் கூறியுள்ள உயில் ஆவணம் ஏதும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. 7ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் கூறினார், அதனால் 18ம் எதிர்மனுதாரர் அவசியமான கட்சி என்பதால் அவரை கட்சியாக சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. மனுவினை மனுதாரர் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காகவே தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**4). 18ம் எதிர்மனுதாரர்/18ம் உத்தேச பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-**

தாவா வழக்கில் எதிர்மனுதாரரை சேர்ப்பதற்குண்டான மனுவில் சொல்லியுள்ள அடமான ஆவணம், கிரைய ஆவணம் எதுவும் வாதிகள் தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யும்பட்சத்தில் எதிர்மனுதாரர் தாவா வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் என்பதை தீர்மானிக்க இயலும். வாதிகள் ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் எதிர்மனுதாரரை சேர்க்க சொல்லி வாதிகள் தாக்கல் செய்துள்ள மனு நிலைநிற்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும் என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6). மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**8). தீர்வு:-**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர்களால் மனுவில் கண்ட 18ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 18ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடவேண்டி மனு 05.09.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரர்களால் தங்களது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போயும், அவசிய தரப்பினர்களை தரப்பினர்களாக சேர்க்காத தோஷத்திற்கு ஆளாகக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும்

எழக்கூடும். மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக் கூடும். எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதார்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மனுவில் கண்ட 18ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 18ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடவேண்டி மனு 05.09.2022ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு நவம்பர் திங்கள் 29ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.